# கதைகள் மூலம் இணைவது

உங்களது குழந்தைகள் கதை ஒன்று வேண்டும் என்று கேட்கும்பொழுது, புத்தக அடுக்குக்குச் செல்பவரா நீங்கள், அல்லது குறுந்தகட்டில் (சி.டி.) படம் ஒன்றினைக் காண்பிக்கச் செல்பவரா? அவ்வாறு செய்பவராயின், சுலபமாகத் தொடர்பு கொள்வது மற்றும் பயிற்சிகள் சிலவற்றைச் செய்வதற்கான பொன்னான சந்தர்ப்பம் ஒன்றினை நீங்கள் தவற விடுகிறீர்கள். ஒரு அங்குலம் கூட அசையாமல் உங்களுக்குத் தேவையான அனைத்துமே கிடைக்கப்பெறுவீர். சிறிது நேரம் சிந்தித்து நினைவு கூர்ந்து, பின்னர் அமர்ந்து கொண்டு அவர்களுக்குக் குடும்பக் கதை ஒன்றினைக் கூறுங்கள். முதலில் அது பொருத்தமற்றது போல இருக்கலாம், ஆனால் விரைவிலேயே பயனுள்ள, அனைவருக்கும் கேளிக்கை தரக்கூடிய பெற்றோர் பேணல் கருவி ஒன்றினை வளர்த்துக் கொண்டதை நீங்கள் உணர்வீர்கள்.

**குடும்ப நினைவலைகள்**

குடும்பத்தின் கதை ஒன்றினைச் சொல்வதில் நினைவு ஒன்றினைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் அதற்கு நல்ல உயிரூட்டுதல் ஆகியவை அடங்கும். சில யோசனைகள் இங்கே:

- அவர்களைப் பற்றிய சிலவற்றை அவர்களுக்குக் கூறுங்கள்: அவர்களது பெயர் எங்கிருந்து வந்தது. அவர்கள் பிறந்த நாளைப் பற்றி. அவர்களது பாட்டன் பாட்டிகள் முதல் முறை அவர்களை வந்து பார்த்தது.
- உங்களைப் பற்றியும் மேலும் உங்களது சொந்த நினைவலைகளைப் பற்றியும் பேசுங்கள்: நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணையை எவ்வாறு சந்தித்தீர்கள், உங்கள் வாழ்க்கையில் நீங்கள் பெற்ற சிறந்த பரிசுப் பொருள் எது, நீங்கள் இளம் குழந்தையாக இருந்தபொழுது எதைக் கண்டு மிக அதிகம் அஞ்சினீர்கள்.
- உங்கள் குடும்பத்தின் வேரைத் திரும்பிப் பாருங்கள்: உங்கள் பெற்றோர் வளர்ந்தது பற்றிய கதைகளை நினைவு கூற முயலுங்கள. உங்கள் குடும்பம் உலகின் வேறொரு பகுதியிலிருந்து குடி பெயர்ந்திருந்தால், அது எப்படிப்பட்ட இடம், அந்த இடம் இங்கிருந்து 500 கிலோ மீட்டர் தொலைவா, 5000 கிலோ மீட்டர் தொலைவா போன்ற கதைகளை உங்கள் குழந்தைகளுக்குச் சொல்லுங்கள்.
- உங்களைச் சுற்றியுள்ள பொருட்களை அடிப்படையாக எடுத்துக் கொள்ளுங்கள்: உங்கள் சேகரிப்பில் உள்ள பூந்தொட்டி எவ்வாறு அந்த அடுக்குக்கு வந்தது என்பது பற்றிக் கூறுங்கள். நினைவுப் பொருளாக அந்தக் கரண்டியை விடுமுறைக்குச் சுற்றுலா சென்றபொழுது வாங்கியது பற்றிப் பேசுங்கள்.
- பருவம் பற்றிய கதை ஒன்றினைக் கூறுங்கள்: இலையுதிர் காலமாயின், ஹாலோவீன் உடைகள் பற்றிக் கூறுங்கள். குளிர் காலமாயின், பனிச் சறுக்கு விளையாட்டின் சாகசங்கள் பற்றி நினைவு கூறுங்கள்.

நீங்களும் உங்கள் குழந்தைகளும் ஒன்றாக இருக்கும் எந்தச் சூழலிலும் குழந்தைகளுக்குக் கதை சொல்லலாம். நீங்கள் சலவைத் துணிகளைப் பிரிக்கும்பொழுது, மளிகைக் கடைக்கு வண்டியோட்டிச் செல்லும்பொழுது, பேருந்து நிறுத்தத்திற்கு நடந்து செல்லும்பொழுது... அல்லது நாளின் இறுதியில் இருள் நிறைந்த படுக்கை அறையில் ஒன்றாகப் படுத்திருக்கும்பொழுது.

**கதைகள் சொல்லப்படுகின்றன ஒப்புவிக்கப் படுவதில்லை**

கதை சொல்வது என்பது பெரிதும் ஒரு உரையாடலைப் போல ஒரு இருவழித் தொடர்பு ஆகும். நீங்கள் கதை சொல்லும்பொழுது உங்கள் குழந்தை கேள்வி ஒன்றினைக் கேட்க வேண்டும் அல்லது கதையின் ஒரு நிகழ்வைத் திருத்த வேண்டும் என எதிர்பாருங்கள். அவர்களுக்குப் பொருந்தும் வண்ணம் நீங்கள் உங்கள் கதையை உருவாக்கலாம். கதை என்பது, கேட்கத் தயாராகும்பொழுது தொடங்கி அவர்கள் அமைதியின்றி நெளியும்பொழுது முடிக்கப்பட வேண்டும்.

உங்கள் கதைகளின் தரத்தை உயர்த்தச் சைகைகள், குரலின் தொனி இவற்றைப் பயன்படுத்தக் கற்றுக்கொள்ளுங்கள். பயிற்சியின் வாயிலாக, குரலில் ஏற்ற இறக்கத்தைக் கொண்டு வர முடியும், மேலும் சைகைகள், உடலசைவுகள் மற்றும் இடைவெளி விடுதல் ஆகியவற்றை நீங்கள் பயன்படுத்த முடியும். இயல்பான நடத்தை முறைகளைச் சிறிது மிகைப்படுத்திச் செய்வதன் வாயிலாக உங்கள் சிறு குழந்தைகள் கவனத்தை ஈர்க்கலாம். எந்த உரையாடலிலும் நிகழ்வதைப் போல, கதை சொல்லும்பொழுதும், நீங்கள் ஏதேனும் ஒரு செய்தியை மறந்துவிட்டால், அது ஒரு பெரிய சிக்கல் அன்று. கதை சொல்லுபவர்கள் அடிக்கடி, "நான் இதைப்பற்றிச் சொன்னேனா...", "அவள் இந்தக் கணம் வரை எதனை மறந்துவிட்டாள் தெரியுமா..." என்பது போன்ற தொடர்களைச் சமாளிப்புக்களாகப் பயன்படுத்துவர்.

கதைகளுக்கும் உரையாடலுக்கும் இடையே உள்ள வேறுபாடு என்னவென்றால் கதைகள் ஒரு கருத்தை மையமாகக் கொண்டிருக்கும். அறிந்துகொள்ளத்தக்க மதிப்புடைய செயல்கள் சில நிகழும். கதையின் மையப் பாத்திரம் நேர்மையானவனாக, கஞ்சனாக, தன்னம்பிக்கை உடையவனாக, அல்லது தன்முனைப்பு உள்ளவனாக இருக்கலாம், அது அவனுக்கு ஒரு பிரச்சனையை, நெருக்கடியை அல்லது நகைச்சுவையான சூழ்நிலையை உருவாக்கலாம்.

**கேட்பவர்களுக்கேற்ற கதைகள்**

உங்கள் குழந்தைகள் என்ன மாதிரிக் கதைகளை ரசிக்கின்றன என்பதை நீங்கள் விரைவாக அறிந்துகொள்வீர். குழந்தைகள் மிக இளையவர்களாக இருக்கும்பொழுது, அவர்கள் ஒரே குறிப்பிட்ட கதையைத் திரும்பத் திரும்பக் கேட்க விரும்புவர். பாடலில் இடம்பெறும் பல்லவியைப் போல, சில சொற்றொடர்களைக் கதையில் மீண்டும் மீண்டும் திரும்பச் சொல்வது அவர்களுக்குப் பிடிக்கும். "மூ" எனும் மாடுகளின் சத்தம் மற்றும் டிங் டாங் எனும் மணியோசை போன்ற சிறப்பு சப்தங்கள் குழந்தைகளின் கவனத்தை ஈர்ப்பது நிச்சயம்.

மூத்த குழந்தைகள் அதிரடிச் செயல்கள், வியப்புக்கள், நாடகப்பாங்கு இவற்றை விரும்புவர். இளைஞர்கள், தன்னனுபவக் கதைகளை, குறிப்பாக நீங்கள் சங்கடப்பட்ட தருணங்கள், கவலைப்பட்ட நேரங்கள் அல்லது தவறு செய்த நிகழ்வுகள் குறித்த கதைகளை விரும்புவர். அவர்கள் வயதில் நீங்கள் இருந்தபொழுது, அதே கடின உணர்வுகள் உங்களை வாட்டியது என்பதை அவர்கள் இக்கதைகளின் வாயிலாக உறுதிப்படுத்திக் கொள்கின்றனர்.

**இதனால் என்ன நன்மை?**

உங்கள் குழந்தைகளுக்கு, நீங்கள் உங்கள் சொந்தச் சொற்களில் கதை கூறுவதற்குப் பல காரணங்கள் உள்ளன.

- கதை சொல்லும் நேரம் குடும்ப இணைப்புக்களை உருவாக்குகிறது. நீங்களும் உங்கள் குழந்தைகளும் கேளிக்கை, படைப்பு அனுபவத்தைப் பகிர்ந்துகொள்கிறீர்கள். அதே நேரத்தில், உங்கள் வாழ்க்கை பற்றியும், உங்களது செயல்பாட்டு முறைகள் பற்றியும், உங்களது வேர்கள் பற்றியும் உங்கள் குழந்தைகள் அதிகமாகத் தெரிந்துகொள்கின்றனர்.
- குழந்தைகள் தங்கள் கவனத்தை ஒருமுகப்படுத்தவும், சிறந்த கேட்பாளர்களாக உருவாகவும் கற்றுக்கொள்கின்றனர்.
- உங்கள் கதையில் நீங்கள் உருவாக்கிச் சொல்லும் சொல்லோவியங்களின் வாயிலாக, உங்கள் குழந்தைகளின் கற்பனைகளை விரிவுபடுத்துகிறீர்கள்.
- நீங்கள் மிகக் கடினமான உணர்வுகளோடு தொடர்புடைய கதைகளைச் சொல்வதன் வாயிலாக, உங்கள் குழந்தைகளைத் தங்கள் மனத்தில் ஏற்படும் கடின உணர்வுகளிலிருந்து விடுபடச் செய்கிறீர்கள். எடுத்துக்காட்டாக, ஒரு கதையில், நீங்கள் குழந்தைகளின் அச்சத்தை ஏற்று அவர்களின் கவலையைப் போக்கலாம். கசப்பான நினைவுகள் கூட வாழ்வின் தொல்லைகளை எவ்வாறு கடப்பது என்பது தொடர்பான கதைகளைச் சொல்ல உங்களைத் தூண்டலாம்.
- சில நேரங்களில் சொற்பொழிவு நிகழ்த்தாமல், குழந்தைகளுக்கு வேண்டிய வழிகாட்டுதல்களைத் தர நீங்கள் கதைகளைப் பயன்படுத்தலாம். ஒரு குழந்தை சிக்கலான சூழ்நிலை ஒன்றில் இருந்தால், கதையின் மையமான பாத்திரம் அதே போன்ற சிக்கலைச் சந்திப்பதைப் போன்ற கதையை நீங்கள் சொல்லலாம். இந்த முறையினால், நீங்கள் அக்குழந்தை, தன் நெருக்கடியை எதிர்கொள்வதில் ஒரு படியை நீக்க உதவுகிறீர்கள். இந்தத் தொலைவிலிருந்து விளைவுகளைக் கருத்தில் கொள்வது பெரும்பாலும் எளிதாகும். கதையை ஓரிடத்தில் நிறுத்திவிட்டு, "இப்பொழுது அடுத்து என்ன நிகழும் என்று நீ நினைக்கிறாய்?" அல்லது "இந்தச் சூழலில் இந்தப் பாத்திரம் என்ன செய்ய வேண்டும் என நீ நினைக்கிறாய்?" என்று நீங்கள் கேட்கலாம்.

ஒரு முறை தொடங்கிவிட்டால், பூச்சியைப் பிடிப்பது போல மேலும் நீங்கள் அமைதியான தருணங்களுக்கேற்ற கதைகள் பலவற்றை உருவாக்கிச் சேமித்து விடுவீர்கள். செல்லுங்கள், சென்று கதைகள் சிலவற்றைக் கூறுங்கள்!

கனடா *FRP* வளத் தாள் ஒன்றின் அசலின் தழுவலாக *1997* இல் *Jane Waterston* என்பவரால் எழுதப்பட்டது

# Nouer des liens au moyen d'histoires

Lorsque vos enfants réclament une histoire, vous dirigez-vous vers un livre ou vers un DVD? Si oui, vous ratez une occasion en or de nouer des liens et de faire passer des messages. Vous avez tout ce qu'il vous faut à portée de main. Prenez un moment pour réfléchir et laissez venir les souvenirs. Ensuite, assoyez-vous pour raconter une anecdote au sujet du passé de votre famille. Vos premières tentatives manqueront peut-être d'assurance, mais vous vous rendrez bientôt compte que vous avez ajouté un élément utile à votre trousse d'outils parentaux, un outil qui en plus fait plaisir à tous.

## Les souvenirs de famille

Quand vous racontez une histoire de famille, vous sélectionnez un souvenir et vous lui donnez vie. Voici quelques suggestions :

- Racontez aux enfants une **histoire à leur sujet** : l'origine de leurs noms; le jour de leur naissance; la première rencontre avec leurs grands-parents.
- Parlez de **vous-même** et de vos souvenirs : l'occasion où vous avez rencontré votre conjoint ou conjointe; le plus beau cadeau que vous avez reçu; ce qui vous faisait peur quand vous étiez jeune.
- Faites appel aux **racines de votre famille** : essayez de vous rappeler des histoires au sujet de la jeunesse de vos propres parents; si votre famille vient d'ailleurs, parlez à vos enfants de cet endroit, qu'il soit situé à 500 ou à 5000 kilomètres.
- Inspirez-vous des **objets qui vous entourent** : dites-leur comment vous avez acquis le vase dans le salon; parlez des vacances au cours desquelles vous avez acheté cette cuillère souvenir.
- Racontez une histoire en lien avec la **saison** : à l'automne, parlez de costumes d'Halloween; en hiver, rappelez-vous des aventures dans la neige et sur la glace.

Vous pouvez raconter des histoires n'importe où. Vous pouvez être en train de trier la lessive ensemble, de rouler en auto vers le supermarché, de marcher jusqu'à l'arrêt d'autobus... ou de câliner dans la pénombre de la chambre à la fin de la journée.

## L'art de raconter

Quand on raconte une histoire, la communication se fait **dans les deux sens**, un peu comme dans une conversation. Attendez-vous à ce que vos enfants vous interrompent pour poser des questions et pour corriger un détail. Vous pouvez ajuster votre histoire en fonction de votre public. L'histoire commence quand ils sont prêts et se terminent quand ils commencent à s'agiter.

Apprenez à vous servir de **gestes** et du **ton de votre voix.** Avec un peu de pratique, vous serez capable de modifier le registre et le rythme de votre voix, et de vous servir aussi de mouvements, de gestes et de pauses. Votre jeune auditoire sera captivé si vous exagérez des maniérismes habituels. À l'image des conversations, ça ne pose pas de problème si vous oubliez un détail. Les conteurs font souvent des détours en se servant de phrases telles : « Est-ce que j'ai mentionné que... » et « Ce qu'elle avait oublié jusqu'alors... ».

Les histoires diffèrent du bavardage en ce qu'elles ont **un but précis**. Il se produit quelque chose qui est bon à savoir. Peut-être le personnage principal est-il honnête, grippe-sou, arrogant ou sûr de lui. Peut-être cette qualité occasionne-t-elle un problème, une crise ou une situation comique.

## Suivez les goûts de votre public

Vous apprendrez vite ce qui plaît à vos enfants. Très jeunes, les enfants aiment écouter la même histoire... encore et encore. Ils aiment également entendre les mêmes phrases répétées au sein de l'histoire, comme le refrain d'une chanson. Les effets sonores, tels les vaches qui font « meu, meu » et les cloches qui font « ding, dong », sont une valeur sûre pour attirer leur attention.

Les enfants plus âgés sont attirés par l'action, les surprises et le drame. Les ados préfèrent des histoires tirées du vécu, surtout quand elles font ressortir des moments où vous étiez gênés, anxieux ou dans le tort. Il est rassurant de savoir que les mêmes émotions fortes vous ont secoués quand vous aviez leur âge.

## Quels sont les avantages?

Il existe toutes sortes de raisons de raconter des histoires à vos enfants dans vos propres mots.

- L'heure du conte renforce les **liens familiaux**. Vous et vos enfants partagent une expérience amusante et créative. Du coup, les enfants en apprennent plus au sujet de votre vie, vos réactions et vos racines.
- Les enfants apprennent à **se concentrer** et deviennent des auditeurs actifs.
- Vous activez l'**imagination** des enfants au moyen des images que vous dessinez avec des mots.
- En racontant des histoires qui traitent d'**émotions difficiles**, vous aidez les enfants à calmer leurs propres émotions fortes. Dans le cadre d'une histoire, vous pouvez reconnaître leurs peurs et soulager leurs craintes. Même les mauvais souvenirs donneront lieu à des histoires de difficultés vécues et vaincues.
- Parfois, vous pouvez vous servir d'histoires dans le but de **guider l'enfant** sans le sermonner. Si un enfant fait face à une situation épineuse, vous pouvez raconter une histoire dont le personnage principal est confronté à un problème semblable. De cette façon, vous aidez l'enfant à prendre du recul face à sa situation. Il arrive souvent que cette perspective lui permettra de mieux réfléchir aux conséquences éventuelles. Faites une pause dans l'histoire à un moment donné et posez la question, « Qu'est-ce qui va arriver maintenant? » ou « Que penses-tu que cette personne devrait faire? »

Une fois parti, vous y prendrez goût et vous commencerez à accumuler des histoires pour des moments opportuns. Allez-y, racontez quelques histoires!

*adapté d'un feuillet ressource écrit pour FRP Canada en 1997 par Jane Waterston*